## முத்தமிழறிஞர் கலைஞரே ஒரு மாபெரும் நூலகம்தான்!

# நூலகங்களே பண்பாட்டின் சிகரங்கள்! வாழ்வின் உயர்வுக்குப் படியுங்கள்!

# வாசிப்பை நேசிப்போம்! பகுத்தறிவால் வெல்வோம்!

## தஞ்சை விழாவில் – உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் – கோவி.செழியன் பேச்சு!

**தஞ்சாவூர், நவ.20 -**

**தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மாநகராட்சி அறிஞர் அண்ணா நூற்றாண்டு அரங்கில் பொது நூலகத்துறை மாவட்ட மைய நூலகம் மற்றும் வாசகர் வட்டம் சார்பில் 57வது தேசிய நூலக வார விழா மகிழ்ச்சித் திருவிழா உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் முன்னிலையில் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி பா.பிரியங்கா பங்கஜம், தலைமையில் (17.11.2024) அன்று நடைபெற்றது.**

இந்நிகழ்ச்சியில் ஆவணக் குரிசில் விருது 7 பேருக்கும், வாழ்நாள் சாதனையாளர் விருது 8 பேருக்கும், எழுத்துலகின் இளம்பருதி விருது 6 பேருக்கும் வழங்கி உயர்கல்வித் துறை அமைச்சர் பேசியதாவது:-

மாவட்ட மைய நூலகம் மற்றும் வாசக வட்டம் இணைந்து நடத்தும் 57-வது தேசிய நூலக வார விழா இன்று சிறப்பாக நடைபெறுகிறது. இதில் பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களுக்கு பேச்சுப் போட்டி, கவிதைப் போட்டி, ஓவியப் போட்டி போன்றவை நடத்தப்பட்டு வெற்றி பெற்ற மாணாக்கர்களுக்கு நினைவு பரிசு மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

மாவட்ட மைய நூலகத்தில் நாளொன்றுக்கு 400-க்கும் மேற்பட்ட போட்டித் தேர்வு மாணவர்கள் வந்து படித்து வருகின்றனர். இவர்களுக்குத் தேவையான வசதிகள் அனைத்தும் நூலகத்தில் செய்து தரப்பட்டுள்ளது. இவ்வாண்டில் 39 மாணாக்கர்கள் அரசு போட்டித் தேர்வில் வெற்றிபெற்று அரசுப் பணிக்கு சென்றுள்ளனர்.

**தஞ்சை மாவட்டத்தில் 118 நூலகங்கள்!**

தஞ்சாவூர் மாவட்ட நூலக ஆணைக்குழுவில் 1 மாவட்ட மைய நூலகம், 11 முழுநேர நூலகங்கள், 47 கிளை நூலகங்கள், 48 ஊர்ப்புற நூலகங்கள், 11 பகுதிநேர நூலகங்களாக மொத்தம் 118 நூலகங்கள் செயல்பட்டு வருகின்றது.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின்கீழ் தஞ்சாவூர் மாவட்டம், திருவிடை மருதூர் முழுநேர கிளை நூலகத்திற்கு ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் டஜிட்டல் நூலகம் கட்டப்பட்டு வருகிறது.

பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அறிவித்ததற்கிணங்க ஒரத்தநாடு முழுநேர கிளை நூலகத்திற்கு ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் புணரமைக்கும் பணிகள் நடைபெற்றுள்ளன.

பட்டுக்கோட்டை முழுநேர கிளை நூலகம், தாமரங்கோட்டை கிளை நூலகம், தஞ்சாவூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் பேரூராட்சி / ஊராட்சியில் அமைந்துள்ள மாத்தூர், கதிராமங்கலம், நெய்வேலி தென்பாதி, நடுவிக்கோட்டை, பட்டீஸ்வரம், நாஞ்சிக்கோட்டை, நாச்சியார்கோவில், சூரக்கோட்டை, திருபுவனம், நாட்டுச்சாலை, செங்கமங்கலம், சித்துக்காடு, வீரராகவ புரம் ஆகிய 13 கிளை மற்றும் ஊர்ப்புற நூலகங்களுக்கு சுமார் ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

**முழு நேரம் செயல்படும் கிளை நூலகங்கள்!**

தஞ்சாவூர் மாவட்டத்தில், செயல்பட்டு வரும் மாவட்ட மைய நூலகம் முழுநேர கிளை நூலகம், கிளை நூலகங்கள் மொத்தம் 54 நூலகங்களில் Wifi வசதி செய்யப்பட்டு மாணாக்கர்களும், வாசர்களும் பயன்படுத்தி வருகின்றனர்.

அரிய வகை தகவல்களை அறிந்துகொள்ளவும், அன்றாட புதிய செய்திகளை தெரிந்து கொள்ளவும், நூலகங்கள் மிகவும் இன்றியமையாதது. 2010-ஆம் ஆண்டில் தலைநகரில் தமிழ்நாட்டின் தலைமகன் பேர்ரறிஞர் அண்ணாவின் நூற்றாண்டில் தெற்கு ஆசியாவிலேயே பெரிய நூலகமாக அண்ணா நூற்றாண்டு நூலகத்தை அமைத்துத் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் . அதனை பத்தாண்டுகளில் பாழ்படுத்தியவர்கள் கடந்த கால ஆட்சியாளர்கள்.

கடந்த ஆட்சிக் காலத்தில் பராமரிக்காமல் பாழ்படுத்திய அண்ணா நூற்றாண்டு நூலகத்தை நமது தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களால் ரூ.37.82கோடி நிதி ஒதுக்கீடு செய்து புதுப்பிக்கப்பட்டது. அதுமட்டுமின்றி, அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கு ரூ.6.50 கோடி மதிப்பிலான புத்தகங்கள், மின்புத்தகம், மின் பத்திரிக்கைகள், மின் ஆராய்ச்சி இதழ்கள் முதலமைச்சர் வழிகாட்டுதலின் பேரில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் கொள்முதல் செய்யப்பட்டது.

**மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம்!**

கலைஞரின் நூற்றாண்டில் நமது தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் , சங்கம் வைத்து தமிழ் வளர்த்த மாமதுரையில் சங்ககால இலக்கியங்களை சாமானியருக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் தென் தமிழ்நாட்டின் அறிவாலயமாகத் திகழ ரூ.218 கோடி செலவில் மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை அமைத்துள்ளார்.



இந்நூலகத்தில் 3,62,393/- நூல்கள் இடம்பெற்று நூலகம் திறந்து சராசரி தினசரி 3,000 நபர்கள் நூலகத்தை பயன்படுத்தி வருகின்றனர்.

போட்டித் தேர்வுக்கு தயாராகும் மாணவர்களுக்கு தேர்வுகளுக்குரிய நூல்களும், ஆங்கிலச் செய்தித்தாள்களில் உள்ள தலையங்கங்கள் பகுதி தமிழில் மொழிப்பெயர்ப்பு செய்து தினசரி வழங்கப்பட்டு வருகிறது.

பேரரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய இரண்டு பேரையும் உருவாக்கிய தந்தை பெரியார் பெயரில் மேற்கு பகுதியினர் பயன்பெறும் வகையில் கோவை மாநகரில் நூலகம் அமைக்க தமிழ்நாடு முதலமைச்சர் உத்தர விட்டு 06.11.2024-இல் அடிக்கல் நாட்டியுள்ளார்.

கன்னிமாரா நூலகத்தின் பாரம்பரியம் மாறாத வகையில் ரூ.3.19 கோடி செலவில் கட்டமைக்க முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டு புணரமைக்கப்பட்டுள்ளது.

**மாணவர்களுக்கு சிறப்புப் பிரிவு!**

போட்டித் தேர்வுகளுக்கு மாணவர்கள் பயன்பெறும் வகையில் நவீன வசதிகளுடன் கூடிய சிறப்புப் பிரிவு ரூ.5 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் உத்தரவிடப்பட்டு தொடங்கப்பட்டுள்ளது.

இந்திய நூலகத் தந்தை முனைவர் எஸ்.ஆர்.அரங்கநாதன் அவர்களை நினைவு கூறும் வகையில் அவர்பெயரில் தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவின் பேரில் சீர்காழியில் ரூ.1.32 கோடி செலவில் ஓர் நூலகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

பெரியாரும் கலைஞரும் படிக்காத மேதைகளாக அறியப்படுவதற்கு அவர்களது வாசிப்பே காரணமாகும்.

நூலகங்கள் இல்லாவிட்டால் பண்பாடு, நாகரீகம், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், மனித குல வளர்ச்சி என்பது சாத்தியமே இல்லை. ஒரு நாளில் 18 மணி நேரங்களை காரல் மார்க்ஸ் நூலகங்களில் செலவிட்டதாக சொல்வார்கள். உலக வரலாற்றில் பேரறிஞர்களாகவும் பெரும் தத்துவ மேதைகளாகவும் அரசியல் அறிஞர்களாகவும் அறியப்படுகிறவர்கள் அனைவரும் நூலகங்களால் வளர்க்கப்பட்டவர்களே.

**புத்தகங்கள் மீது அண்ணாவின் ஆர்வம்!**

புத்தகங்களைப் படிக்க வேண்டும் என்கிற அண்ணா அவர்களின் ஆர்வம் - அதற்கு ஒரு உச்சக்கட்டத்தைச் சொல்ல வேண்டுமென்றால் - அண்ணா நோய்வாய்ப்பட்டு, அமெரிக்கா சென்று - அமெரிக்காவிலிருந்து திரும்பிவந்து மீண்டும் இரண்டாவது தடவையாக நோய் அவரைப் பற்றிக் கொண்டு அடையாறு மருத்துவமனையிலே அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமென்ற சூழ்நிலையில் இரண்டாவது முறையாக மருத்துவமனையிலே அண்ணா அனுமதி க்கப்பட்டார். கலைஞரும் பேராசிரியர் போன்றவர்களும் அவரைச் சூழ்ந்து இருந்தனர்.

அவரை அறுவை சிகிச்சைக்காக அழைத்துச் செல்கின்ற நேரம் வரையில் - (அறுவைச் சிகிச்சைக்கச் சென்ற பிறகு அண்ணா கண் திறக்கவில்லை; பிறகு மறைந்து விட்டார்) - ஆனால் செல்கின்ற நேரம் வரையிலே அவர் ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டே இருந்தார். அந்தப் புத்தகத்தைக் கீழே வைக்கவே இல்லை. அங்கிருந்த மருத்துவர்கள் அண்ணா அவர்களை அறுவைச் சிகிச்சை அறைக்கு வாருங்கள் என்று அழைத்துச் செல்ல வந்தபிறகுதான், அந்தப் புத்தகத்தை அண்ணா மூடி வைத்தார்கள். அப்படி இறுதிக் கட்டத்திலே கூட - இறுதி மூச்சு விடுகின்ற நேரத்திலே கூட - தன்னுடைய உயிர் இனி நிலைக்கப் போவதில்லை; என்றுதானே உணர்ந்த அந்தச் சூழலிலே கூட அண்ணா புத்தகத்தைப் படித்துக் கொண்டிரு ந்தார் என்பதைச் சொல்வதற்குக் காரணம், இன்றைக்கு புத்தகங்களைப் படிப்பதே ஒரு அலுப்பான விஷயம்; தேவையற்ற வேலை; என்று எண்ணிக் கொண்டிருக்கின்ற இளைய தலைமுறைக்கு இந்தச் செய்தி எட்ட வேண்டும் என்பதற்காகத்தான் இதனை சொல்கிறேன்.

**புத்தகங்களைப் பரிசாக வழங்கக் கோரியவர் நம் முதல்வர்!**

புத்தகத்தில் உலகத்தைப் படித்தால் அறிவு செழிக்கும்! உலகத்தையே புத்தகமாகப் படித்தால் அனுபவம் தழைக்கும் என்றார் முத்தமிழறிஞர் கலைஞர். தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அனைத்து அரசு விழாக்களிலும் தன்னை சந்திக்க வருபவர்கள் நூல்களை பரிசாக வழங்க வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.

வீட்டில் அலங்காரத்தையும் விசேஷகால உபயோகத்திற்கான சாதனங்களையும் கவனிப்பது போல, வீட்டிற்கோர் புத்தகசாலை, சிறிய அளவிலாவது அமைக்க நிச்சயமாகக் கவனம் செலுத்த வேண்டும் என்பது பேரறிஞர் அண்ணாவின் நோக்கத்தினை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு சட்டமன்ற தொகுதிகள் தோறும் தி.மு.க IT-Wing மூலம் நூலகத்தினை திறந்து வைத்து உத்தர விட்டு துணை முதலமைச்சர் அவர்களால் தற்போது திறந்து வைக்கப்பட்டு வருகிறது. துணை முதலமைச்சர் சின்னவர் கூற்றுப்படி வாசிப்பை நேசிப்போம், பகுத்தறிவால் வெல்வோம்.

இந்நிகழ்ச்சியில் தஞ்சாவூர் நாடாளுமன்ற உறுப்பினர் ச.முரசொலி , திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகரன் , தஞ்சாவூர் சட்டமன்ற உறுப்பினர் டி.கே.ஜி.நீலமேகம் , பேராவூரணி சட்டமன்ற உறுப்பினர் என். அசோக்குமார் , மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன் , சதய விழா குழுத் தலைவர் செல்வம் , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.ராமச்சந்திரன், மகேஷ் கிருஷ்ணசாமி, மாவட்ட ஊராட்சித் தலைவர் திருமதி ஆர். உஷா புண்ணியமூர்த்தி , மாநகராட்சி துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி , வாசகர் வட்டத் தலைவர் புலவர் மா.கோபாகிருட்டினன், ஆசிரியர் மனசு திட்ட ஒருங்கிணைப்பாளர் நல்லாசிரியர் சிகரம் சதீஷ்குமார், மாவட்ட நூலக அலுவலர் பா.முத்து, ஒன்றிய குழுத் தலைவர்கள், நகர மன்றத் தலைவர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

---

### துணை முதல்வரின் சீரிய தலைமையில் – தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின்

# பகுதி அளவிலான கூட்டமைப்புகளின் வெற்றிகரமான செயல்பாடுகள்!

## ஏழை, எளிய மக்கள் பொருளாதார அளவில் மேம்பாடடைகின்றனர்!

சென்னை, நவ. 20 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் இயங்கி வரும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் நோக்கமானது, நகர்ப்புற ஏழைகளிடையே சமுதாயம் சார்ந்த அமைப்புகளை உருவாக்கி அவர்களின் வறுமையையும், நலிவு நிலையையும் குறைத்து, சுய வேலை வாய்ப்பு மற்றும் திறன் மேம்பாட்டுடன் கூடிய வேலை வாய்ப்புகளுக்கு வழி வகுத்து, அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரத்தினை குறிப்பிடத் தக்க அளவில் மேம்படுத்துவதும், நிலைத்த தன்மை அடையச் செய்வதும் ஆகும்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் குறைந்த பட்சம் 1020 சுய உதவிக் குழுக்களை ஒருங்கிணைத்து பகுதி மற்றும் வார்டு அளவில் பகுதி அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன. ஏழை எளிய மக்களின் அமைப்பாக நகர்ப்புறங்களில் செயல்பட்டு வரும் ஒவ்வொரு பகுதி அளவிலான கூட்டமைப்பும் முறையான வட்டி விகித்தில் உடனடியாக கடன் பெற வழிவகை செய்தல், சுய உதவிக் குழுக்களின் பொருளாதார நடவடிக்கைகளை கண்காணித்தல் போன்ற நடவடிக்கைகளின் சுய உதவிக் குழுக்களுக்கு வழிகாட்டியாக உள்ளதுடன், கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள குழுக்களுக்கு பல்வேறு அரசு திட்டங்களின் பயன்கள் மற்றும் மானிய உதவிகளை பெறவும் வழிகாட்டுகிறது.

1.5.2021 முதல் 30.10.2024 வரை 2,538 பகுதி அளவிலான கூட்டமைப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன. 6 மாதங்கள் சிறப்பாக செயல்பட்ட, பதிவு பெற்ற வெற்றிகரமாக மதிப்பீடு செய்யப்பட்ட அனைத்து பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கும் சுழல் நிதி வழங்கப்பட்டு வருகிறது. இந்த சுழல் நிதியானது தேவையின் அடிப்படையில் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்குக் கடனாக வழங்கப்படும். இதுவரை 1,415 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ரூ.7.07 கோடி சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற பகுதி அளவிலான கூட்டமைப்பில் இணைந்துள்ள குழுக்களின் கடன் தேவைகளைக் கண்டறிந்து அவர்களுக்கு பகுதி அளவிலான கூட்டமைப்பின் மூலம் வங்கியில் 317 திட்ட முன்வரைவுகள் சமர்ப்பிக்கப்பட்டு இதுவரை 277.97 கோடி ரூபாய் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு கடனாக வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தில் பகுதி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் 3,145 சுய உதவிக் குழு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு, 1,929 பள்ளிகளில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் 1,11,979 குழந்தைகளுக்கு ஊட்டச் சத்தான உணவை சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள் உறுதி செய்கிறார்கள்.

சிறு, குறு உணவு உற்பத்தி மற்றும் பதப்படுத்தும் நிறுவனங்களுக்கான முறைப்படுத்தும் திட்டத்தின் மூலம் பகுதி அளவிலான கூட்டமைப்பை சார்ந்த 7,019 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.27.08 கோடி ரூபாய் மூலதன ஆதார நிதி வழங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் அவர்கள் தாங்கள் மேற்கொண்டு வரும் தொழிலினை வலுப்படுத்தி கூடுதல் வருமானத்தை ஈட்டி வருகின்றனர்.

இவ்வாறு பல்வேறு அரசு திட்டங்கள் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம் அமைக்கப்பட்ட பகுதி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் ஏழை எளிய மக்கள் பயன்பெற்று சமூக மற்றும் பொருளாதார அளவில் மேம்பாடு அடைந்து வருகின்றனர்.



ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி மற்றும் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி ஆகியோர் திண்டுக்கல் எஸ்.எஸ்.எம். பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி கூட்ட அரங்கத்தில் 17.11.2024 அன்று நடைபெற்ற 71வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழாவில் கலந்துகொண்டு பயனாளிகளுக்கு கடனுதவிகளை வழங்கினர். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மொ.நா.பூங்கொடி, திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், பழனி சட்டமன்ற உறுப்பினர் இ.பெ.செந்தில்குமார், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் ச.காந்திராஜன், திண்டுக்கல் மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ், திண்டுக்கல் மண்டல கூட்டுறவு சங்கங்கள் இணைப்பதிவாளர் (கூ.பொ.) திருமதி இரா.சுபாஷினி, திண்டுக்கல் மாநகராட்சி வடக்கு மண்டலத் தலைவர் ரா.ஆனந்த் மற்றும் பலர் உள்ளனர்.

---

## திராவிடர் - திராவிடம் பற்றி இனமானப் பேராசிரியர்!



திராவிடர் – திராவிடம் பற்றிப் புரியாதவர்களுக்கும், அறியாதவர்களுக்கும், வாய் நீளம் காட்டும் அரசியல் அரை வேக்காடுகளுக்கும், நமது இனமானப் பேராசிரியர் அவர்கள் தந்திருக்கும் அருமையான விளக்கம் இதோ :

உண்மையாகவே நாம் 'தமிழர்' என்று சொல்லும்பொழுது நமக்குக் கிடைக்காத உரிமையும், பெருமையும் 'திராவிடர்' என்று சொல்லுகிறபொழுது நமக்குக் கிடைக்கிறது என்பதை நாம் மறந்து விடக்கூடாது.

அந்தக் காலத்திலே தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் சேர்ந்து நீதிக்கட்சியின் பெயரை 'திராவிடர் கழகம்' என்று மாற்றி அமைத்த பொழுது, சில பேராசிரியர்கள் கூட என்னிடத்திலே கேட்டார்கள்.

"எதற்காகத் தமிழ்நாட்டில் தமிழர்களாகிய நாம், திராவிடர் கழகம் என்று பெயர் வைக்க வேண்டும்? தமிழர் என்னும் பெயருடன் கழகம் இருக்கக் கூடாதா?" என்று கேட்டார்கள்.

நான் அவர்களுக்கெல்லாம் சொன்ன விளக்கம் இதுதான் : - "பார்ப்பனரை விலக்காத பெயர் 'தமிழன்'; பார்ப்பனரை விலக்கிய பெயர் 'திராவிடன்' " என்பதுதான்.

பார்ப்பனரின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறுவதற்காகவே தொடங்கப்பட்ட இயக்கம்தான் நீதிக்கட்சி. பார்ப்பனர்களுடைய ஜாதி அடிப்படையிலான வைதிக ஆதிக்கத்தை ஒழிப்பதற்காகப் பிறந்த இயக்கம்தான் சுய மரியாதை இயக்கம். ஆக இரண்டு குறிக்கோளும் சேர்ந்ததுதான் திராவிடர் கழகத்தின் இலட்சியம். அதை அரசியல் மூலம், சட்டத்தின் மூலம் நிலை நாட்டுவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவுதான் திராவிட முன்னேற்றக் கழகம்.

எனவே, அந்த அடிப்படையிலே "தமிழர்" என்று கூறிக்கொள்வதில் நான் பெருமைப்படுகிறேன்; "திராவிடர்"என்பதால் நான் உரிமை பெறுகிறேன்; என்று நான் அவர்களிடத்திலே சொன்னேன்.

அக்காலத்தில் சமயச் சார்புள்ள பெரியவர்களிடமெல்லாம் நான் பழகக் கூடிய வாய்ப்புப் பெற்றிருந்த காரணத்தால், அவர்கள் "எதற்கு இந்த 'திராவிடர்'? ஆதிதிராவிடரோடு உங்களைச் சேர்த்து வைத்துக் கொள்வதிலே என்ன பெருமை உங்களுக்கு?" என்று கேட்பார்கள்.

நான் அவர்களுக்குச் சொன்ன பதில்: ஆதிதிராவிடன்தான் இந்த நாட்டின் முதல் தொல்குடிமகன். அவர்களுடன் சேர்ந்தால்தான் திராவிடர்களுடைய இனவுரிமையும் காக்கப்படும் என்று பதில் சொன்னேன். மனிதத் தன்மையைக் காப்பாற்றவும், அதுதான் வழி - தீண்டாமையை ஒழிக்கவும் அதுதான் வழி - வரலாற்று மறுமலர்ச்சிக்கும் அதுதான் வழி என்று அன்றைக்கு விளக்கம் சொன்னேன்" என்றார்.

**நன்றி : "விடுதலை" 14.11.2024**

---

### நாகை வருகை தரும்

## துணை முதல்வருக்கு சிறப்பான வரவேற்பு!

### நகரக் கழகக் கூட்டத்தில் தீர்மானம்!

நாகை, நவ . 20 -

நாகை மாவட்டம் நாகை நகரக் கழக நிர்வாகிகள் வார்டு கழக செயலாளர்கள் பிரதிநிதிகள் கூட்டம் நாகையில் மாவட்ட தி.மு.க. அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு நாகை நகரக் கழக அவைத்தலைவர் இரா.முருகையன் தலைமை தாங்கினார். நாகை நகரக் கழகச் செயலாளர் நகர்மன்றத் தலைவர் இரா.மாரிமுத்து வரவேற்றார்.

மாவட்டக் கழக பொருளாளரும் மாவட்ட கழகப் பிரதிநிதி மு.லோகநாதன், மாவட்ட கழகப் பிரதிநிதி ஆர்.ரமணி, நகர துணைச் செயலாளர்கள் பி.திலகர், சித்ரா குலோத்துங்கன், பொருளாளர் அபூபக்கர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் நாகை மாவட்டக் கழக செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத் தலைவர் என். கௌதமன் சிறப்புரையாற்றினார்.


கூட்டத்தில் மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஆர்.ஆர். குலோத்துங்கன், மாவட்ட சார்பணி துணை அமைப்பாளர்கள் கலையரசன், பிரதீப், அன்புசெழியன் மற்றும் வார்டு கழகச் செயலாளர்கள், பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

முடிவில் நகரக் கழக துணைச் செயலாளர் வெற்றிலைக் கடை சிவா நன்றி கூறினார்.

கூட்டத்தில் வரும் 24 .11 .2024 நாகை வருகை தரும் துணை முதலமைச்சர், கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நாகை நகர தி.மு.க. சார்பில் நாகை கோட்டவாசல்படியில் இருந்து நாகை வெளிப்பாளையம் அவுரிதிடல் வரை வழி நெடுங்கிலும் ஆயிரக்கணக்கானோர் நின்று மேளதாளத்துடன் சிறப்பான வரவேற்பு அளிப்பது என்றும் வரவேற்பு நிகழ்ச்சி ஏற்பாடுகளை நகரக் கழக நிர்வாகிகள், வார்டு கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் சிறப்பாக செய்து விடுவது என்றும், வரும் 27 ஆம் தேதி பிறந்தநாள் காணும் துணை முதல்வர், கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு பிறந்தநாளை முன்னிட்டு அனைத்து வீதிகளிலும் கழக கொடி ஏற்றி, இனிப்புகள் வழங்கியும், நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பாக கொண்டாடிடுவது என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

---

## அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; 16 – ஆவது நிதிக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து அரசியல் கட்சிகளும், தமிழ்நாட்டுக்கான நிதியை 50 சதவீதமாக உயர்த்தி வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளனரே?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; "நியாயம், நியாயம் என்ற காரணத்தினாலே மட்டும் வெற்றி பெற்றுவிடாது; நியாயத்தின் பக்கம் வலிமை சேர வேண்டும்" - என்றார் பேரறிஞர் அண்ணா.**

**நமது முதல்வரின் கோரிக்கைக்குத் தேவையான வலிமை சேர்ந்திருக்கிறது. நிதிக்குழு, தமிழ்நாடு அரசின் கோரிக்கைக்குத் திரண்டுள்ள வலிமையை எண்ணிப் பார்த்து, நியாயமாக நடந்து கொள்ளும் என்பதே அனைவருடைய எதிர்பார்ப்பாக உள்ளது!**